**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.280/2023**

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 31 ஆம் நாள் வியாழன் கிழமை
எ.ம.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அருள் | த/பெ.: | மருதமுத்து |
| கிராமம்: | பள்ளங்கோவில் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | ஓட்டுநர், அரசுப்பேருந்து கழகம் |
| வயது: | 49 | முகவரி: | பள்ளங்கோவில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 31.07.2025.

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 05.08.2023–ம் தேதியிட்ட இருசக்கர வாகன பதிவு எண்.TN 50 AT 7219 வாகனத்திற்குண்டான MV Report கணினி நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகும். 24.12.2022–ல் மனுதாரருக்கு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு கணினி நகல் **எ.ம.சா.ஆ.2** ஆகும். மனுதாரர் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**</u>

நான் அரசுப்போக்குவரத்துக்கழகத்தில் என்ன பணி செய்து வருகிறேன் என்றால் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். இந்த விபத்து நேருக்கு நேராக ஏற்பட்டது என்றால் இல்லை. நான் திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டிக்கு அரசுப்பேருந்தை ஓட்டி வந்தேன். மனுதாரர் திருத்துறைப்பூண்டியிலிருந்து திருவாரூர் செல்லும் சாலையில் எனக்கு எதிர் திசையில் வந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் என்மீது வழக்கு இருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னை எந்த காவல் நிலையத்தில் விசாரித்தார்கள் என்றால் ஆலிவலம்

காவல் நிலையம். நான் இந்த விபத்திற்கு எனது பேருந்து காரணம் அல்ல என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் எங்கள் பேருந்து மீது போடப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் TN 68 N 0301 என்ற அரசுப்பேருந்தை ஓட்டி வந்த கொத்தமங்கலம், பள்ளங்கோவில், கடியாச்சேரியை சேர்ந்த மருதமுத்து மகன் அருள் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமல் இடது புறம் பேருந்தை ஓட்டாமல் மறுபுறம் ஏறிவந்து ஓட்டி எதிர் திசையில் எனது கணவர் வந்த இருசக்கர வாகனத்தின் பக்கவாட்டின் மீது உரசியதில் நிலை தடுமாறி கீழே விழுந்தது என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி விபத்து சம்பந்தமாக என்னுடைய அரசுப்பேருந்து அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கை சம்பந்தமாக எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விஷயங்கள் ஏற்புடையது அல்ல என்றும், இழப்பீடு தொகை கொடுப்பதிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு அரசுப்பேருந்து கழகம் தான் நஷ்ட ஈடு தொகை கொடுக்க கடமைப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை :– இல்லை.</u>

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.